2011 ஜனவரி 12]

25—

சிகிச்சைப் பிரிவுகள்

***80828—திருமதி ரா. லீமா ரோஸ்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், குலசேகரம் மற்றும் அருமனை அரசு மருத்துவமனையில் குழந்தைகள் பிரிவு மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு துவக்க அரசு ஆவன செய்யுமா?

முற்பகல் 10–05

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கன்னியாகுமரி மாவட்டம், குலசேகரம் மருத்துவமனை 16 படுக்கைகள் வசதி கொண்ட மருத்துவமனையாக ஆரம்பிக்கப்பட்டு, தற்போது ஏழை, எளிய மக்களின் தேவையைக் கருத்தில் கொண்டு படிப்படியாக மேம்படுத்தப்பட்டு, மொத்தம் 60 படுக்கை வசதிகளுடன் இயங்கி வருகிறது. நாள் ஒன்றிற்கு சராசரியாக 368 வெளிநோயாளிகளும், 27 உள்நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் 40 குழந்தைகள் வெளிநோயாளிகளாகவும், 5 குழந்தைகள் உள்நோயாளிகளாகவும் சிகிச்சை பெற்று வருகின்றனர். படுக்கை வசதியைவிட, உள்நோயாளிகளாக அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது. தவிர, விபத்து மற்றும் அவசர சிகிச்சைக்கு, 2008–2009–ல் 5 நோயாளிகள் மட்டுமே சிகிச்சை பெற்றுள்ளனர்.

கன்னியாகுமரி மாவட்டம், அருமனை அரசு மருத்துவமனை 21 படுக்கை வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில் நாள் ஒன்றுக்கு சராசரியாக 309 வெளிநோயாளிகளும், 17 உள்நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகின்றனர். 72 குழந்தைகள் வெளிநோயாளிகளாகவும், 2 குழந்தைகள் உள்நோயாளிகளாகவும் சராசரியாக சிகிச்சை பெற்று வருகின்றனர். 2008–2009–ல் விபத்து மற்றும் அவசர சிகிச்சைக்காக நோயாளிகள் அனுமதிக்கப்படவில்லை. படுக்கை வசதியைவிட, உள்நோயாளிகள்ாக அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது. எனவே, குலசேகரம் மற்றும் அருமனை

அரசு மருத்துவமனைகளில் புதிதாக குழந்தைகள் பிரிவு மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்த தற்போது அவசியம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ்.

திருமதி ரா. லீமா றோஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குலசேகரம் மற்றும் அருமனை அரசு மருத்துவமனைகள் இருக்கும் பகுதி, பேச்சிப்பாறை, கோதையாறு, பாலமோர், சுருளகோடு, ஆலஞ்சோலை, பத்துகாணி, ஆறுகாணி உட்பட்ட பல்வேறு மலையோர கிராமப் பகுதிகளும், பல்லாயிரக்கணக்கான மலைக் கிராமம் மற்றும் ஏழை, எளிய மக்கள் பயன்படுத்தக்கூடிய மருத்துவமனைகளாகும். அவசர சிகிச்சை மற்றும் குழந்தைகள் பிரிவுகளுக்கான மருத்துவத்திற்கு 20 முதல் 25 கிலோ மீட்டர் தொலைவிலிருக்கும் குழித்துறை, பூதப்பாண்டி, தக்கலை அரசு தலைமை மற்றும் தாலுகா மருத்துவமனைகளையே நாட வேண்டியுள்ளது.

தற்பொழுது பரவிவரும் மர்மக் காய்ச்சல் போன்ற பலவிதமான நோய்கள் வெகுவாக குழந்தைகளைப் பாதித்து சிரமத்திற்கு உள்ளாக்குகின்றது. மேலும், சாலைகளில் ஏற்படும் விபத்துகள் அதிகரித்துவரும் நிலையிலும், நெஞ்சுவலி, இருதய நோய் அறுவை சிகிச்சைக்குப்பின் கவனிப்பு, பிரசவத்திற்குப்பின் கவனிப்பு போன்றவற்றிற்கு குழந்தைகள் பிரிவும், அவசர சிகிச்சைப் பிரிவும் மிகவும் தேவையானது. ஆகவே, பொது மருத்துவர், டிப்ளமோ அல்லது M.S. முடித்திருக்கக்கூடிய ஆர்த்தோ எலும்பு மருத்துவர், குழந்தைகள் மருத்துவர் போன்ற காலியாக இருக்கும் மருத்துவர் பணியிடங்களை நிரப்பிடவும், அரசு மருத்துவமனைகளில் ஒரு நோய்க்காக சிகிச்சைக்கு வந்து இன்னொரு நோய்க்கு ஆளாகக்கூடிய அந்த நிலையை மாற்றக்கூடிய வகையில் காலியாக இருக்கக்கூடிய Sanitary Worker பணியிடங்களை நிரப்பிடவும் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரையை முடியுங்கள் அம்மா. முதலில், டாக்டர் என்று சொன்னீர்கள். அடுத்து Sanitary Workers–க்குப் போகிறீர்கள்.

திருமதி ரா. லீமா றோஸ்: Ambulance மற்றும் அடிப்படை வசதிகளும், உபகரணங்களும் அடங்கிய இரத்த வங்கிகளையும் அமைத்து, வரக்கூடிய காலங்களில் குலசேகரம் மற்றும் அரசு

2011 ஜனவரி 12]

மருத்துவமனைகளில் குழந்தைகள் பிரிவும், அவசர சிகிச்சைப் பிரிவும் துவங்க அரசு ஆவன செய்யுமா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குலசேகரம் மருத்துவமனைக்கு 15 கிலோ மீட்டர் தூரத்தில் பத்மநாபபுரத்தில், மாவட்டத் தலைமை அரசு மருத்துவமனையில் குழந்தைகள் பிரிவு மற்றும் விபத்துக்கால அவசர சிகிச்சைப் பிரிவுகள் இயங்கி வருகின்றன. 10 கிலோ மீட்டர் தூரத்தில் ஸ்ரீ மூகாம்பிகை தனியார் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையும், பேச்சிப்பாறையில் ஆரம்ப சுகாதார நிலையமும் இயங்கி வருகின்றன. அருமனை அரசு மருத்துவமனைக்கு 10 கிலோ மீட்டர் தூரத்தில் இடைக்கோடு ஆரம்ப சுகாதார நிலையமும், 12 படுக்கைகள் கொண்ட குழந்தைகள் பிரிவு மற்றும் 6 படுக்கை வசதிகள் கொண்ட அவசர சிகிச்சைப் பிரிவும் குழித்துறை அரசு மருத்துவமனையில் இயங்கி வருகின்றன.

அதேபோல, மாண்புமிகு உறுப்பினர்கள் Scavenger வேண்டுமென்று இங்கே கோரிக்கை வைத்திருக்கின்றனர். அந்தந்த மாவட்டங்களில் ஏற்படும் Scavengers காலிப் பணியிடங்களில் நியமனம் செய்வதற்கு அனுமதி அளித்து அவர்களும் நியமனம் செய்துகொண்டிருக்கிறார்கள்.

அதேபோல, மருத்துவமனைகளில் போதுமான கருவிகள் வழங்கப்பட்டு, X–ray unit, Ultra sound scan, ஆய்வகம், இரத்த சேமிப்பு வங்கி, அறுவை அரங்கு மற்றும் பல வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றார்கள்.

அதேபோல, போதிய மருத்துவர்களும், குழந்தைகள் சிறப்பு மருத்துவர்களும், குழந்தைகள் மருத்துவர்களும் அங்கே பணிபுரிந்து வருகிறார்கள். போதிய செவியர்களும், மருத்துவப் பணியாளர்களும் அங்கு பணிபுரிந்து வருகிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கு நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ்.

[2011 ஜனவரி 12

திருமதி ரா. லீமா றோஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலில் போதுமான மருத்துவர்களும், Scavengers–ம் இருப்பதாகத் தெரிவித்தார்கள். ஆனால் குலசேகரம் அரசு மருத்துவமனையிலும், அருமனை அரசு மருத்துவமனையிலும் Scavengers இன்னும் போடப்படவில்லை. ஏற்கெனவே இருக்கக்கூடிய மருத்துவர்கள் 5 பேரில், தற்போது 3 மருத்துவர்கள் மட்டுமே 2 மருத்துவமனைகளிலும் பணியாற்றுகின்றார்கள். எனவேதான், அந்த மருத்துவர் காலியிடத்தை நிரப்புவதற்காக நான் கேட்டிருந்தேன். உள் நோயாளிகள், வெளி நோயாளிகள் என்பவர்கள் எண்ணிக்கை குறைவாக இருந்தாலும், மலையோரப் பகுதி என்பதைக் கணக்கில் எடுத்து அந்த மருத்துவமனைகளில் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கும், குலசேகரம் அரசு மருத்துவமனையை தாலுகா மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவதற்கும், மஞ்சாலுமூடில் ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்கவும், அரசை வலியுறுத்துகிறேன். அரசு மருத்துவமனையில் இருக்கக்கூடிய உள் நோயாளிகளுக்கு ஒதுக்கக்கூடிய உணவின் அளவுக்கான அந்த நிதி குறைவாக இருக்கிறது. கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த நிலையே தொடர்கிறது. எனவே, உள் நோயாளிகளாக இருக்கக்கூடிய மக்களுக்குப் போதுமான உணவுப் பொருள் முழுமையாக கிடைக்கக்கூடிய வகையில் உணவுப் பொருட்களைப் பொது விநியோகத் திட்டத்தின்மூலமாக வழங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மூலக்கேள்வியாக ஒரு குறிப்பிட்ட கேள்வியைக் கேட்டுவிட்டு, பல துணைக் கேள்விகளைக் கேட்கிறார்கள். மருத்துவர்களைப் பொறுத்தவரையில் குலசேகரம் மருத்துவமனையில் 2 குழந்தைகள் மருத்துவர்களும் ஒரு பெண் மருத்துவர் உட்பட 5 மருத்துவர்களும், 6 செவிலியர்கள், 15 இதரப் பணியாளர்கள் பணிபுரிகின்றார்கள். அதேபோல, நோயாளிகளுக்கு உணவு வழங்குவதற்கு கடந்த காலங்களைப்போல் அல்லாமல், இப்போது புதிதாக மாற்றியமைத்து, புதிய விகிதாச்சாரப்படி உணவு வழங்க வேண்டுமென்று

2011 ஜனவரி 12]

உத்தரவிடப்பட்டு இப்போது நோயாளிகளுக்குத் தரமான உணவை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, மலைப் பகுதி மக்கள் வசதிக்காக, நோயாளிகள் செல்வதற்கு ஆம்புலன்ஸ் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு இப்போது அதுவும் அங்கே நடந்து கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாள்.

திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரத்தைச் சுற்றி பெரிய, பெரிய தொழிற்சாலைகள் இருக்கும் காரணத்தாலும், கோயில்கள் நிறைந்த சுற்றுத்தலமாக இருக்கும் காரணத்தாலும் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருப்பதால் அடிக்கடி விபத்துகள் ஏற்பட்டு உயிரிழப்பு ஏற்படுகிறது. அதனால் அவசர சிகிச்சைப் பிரிவு துவக்கக் கேட்டுக்கொள்கிறேன். காஞ்சிபுரம் அரசு தலைமை மருத்துவமனைக்கு தினமும் அதிக அளவில் சிகிச்சை பெறுவதற்காக நோயாளிகள் வருகின்றனர். இங்கு சிறப்பு மருத்துவர்கள், எம்.டி., எம்.எஸ்., பணியிடங்கள் காலியாக உள்ளன. தேவையான மருத்துவக் கருவிகளும் இல்லை. இதன் காரணமாக நோயாளிகள் செங்கற்பட்டு, சென்னை மருத்துவமனைகளுக்குச் சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்படுகின்றனர். இதனால் நோயாளிகள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகின்றார்கள். ஆகவே, நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க சிறப்பு மருத்துவர், எலும்பு சிகிச்சை மருத்துவர், இதய நோய் மருத்துவர் ஆகியோரை அவசியம், அவசரம் கருதி உடனடியாக நியமனம் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, என்னுடைய கோரிக்கையின் பலனாக எம்.ஆர்.ஐ. ஸ்கேன் வழங்க சட்டமன்றத்தில் அறிவிப்பு வெளியானது. இதுவரை இக்கருவி வழங்கப்படவில்லை. உடனே இக்கருவிகளை வழங்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த கோரம், கீழம்பி ஆகிய இடங்களில் சுகாதார நிலையம் ஏற்படுத்திட அரசு ஆவன செய்யுமா என்பதைக் கேட்டு அமர்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்

[2011 ஜனவரி 12

பல கோரிக்கைகளை முன் வைத்திருக்கிறார்கள். புதிய ஆரம்ப சுகாதார நிலையம், மருத்துவமனைக் கருவிகள் மற்றும் மருத்துவமனைக்கு மருத்துவர்கள் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். கலைஞர் அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்ற பிறகு மருத்துவமனை இப்போது நல்ல முறையில் பராமரிக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களே பாராட்டியிருக்கிறார்கள். மேலும், அதற்காக அரசுக்கு இங்கே பாராட்டுத் தெரிவிக்கமாட்டார்கள். ஏனென்றால் அந்தக் கருவிகள் வழங்கப்பட்டிருக்கின்றன; காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள காஞ்சிபுரம் மருத்துவமனைக்குத் தேவையான மருத்துவர்களை நாங்கள் நியமனம் செய்திருக்கின்றோம். சிறப்பு மருத்துவர்கள், ஆர்த்தோ போன்ற மருத்துவர்கள் வேண்டுமென்று யாராவது கேட்டால் சிறப்பு மருத்துவர்கள் அங்கே வருவதற்கு வாய்ப்பு இருந்தால், நியமனம் செய்வதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம். ஏற்படுகின்ற காலிப் பணியிடங்களை உடனுக்குடன் தேர்வு செய்து, கிட்டத்தட்ட 40 தடவை இங்கே நேர்காணலுக்காக மருத்துவர்களை அழைத்து நாங்கள் பணியமர்த்திக் கொண்டிருக்கிறோம். ஓய்வு பெறுகின்ற இடங்களில் நாங்கள் அடிக்கடி இதுபோன்று செய்து கொண்டிருக்கிறோம். இருந்தாலும், கடந்த 6 மாதத்திற்கு முன்பாக நாங்கள் காஞ்சிபுரம் மருத்துவமனைக்குச் சென்றோம். எங்களுடன் சட்டமன்ற உறுப்பினரே வந்தார்கள், பாராட்டு தெரிவித்திருக்கிறார்கள். அவருடைய கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 26, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

26—

நியாய விலைக் கடை

***104343—திரு. சி. கோவிந்தசாமி:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் வட்டம், கருவம்பாளையம் 2-வது நியாய விலைக் கடையை இரண்டாகப் பிரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?